இது குறித்து அமைச்சரவர்களிடம் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். ஆகவே உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு இதனைப் பரிசிலனை செய்து ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அரசு அது பற்றிப் பரிசிலனை செய்யும்.

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே, நான் கேள்வி கேட்கவில்லை. இப்போது இந்தக் கட்டிடம் இடிந்து ஒருவர் கீழே விழுந்திருக்கின்றார். அந்த நிகழ்ச்சி நம் பக்கத்திலேயே நடைபெற்றிருக்கிறது. ஆகவே ஒருவேளை நாம் இருக்கும் இந்தக் கட்டிடத்திற்கும் ஆபத்து வந்துவிடக் கூடாது. ஆகவே உடனடியாக அதைக் கவனிப்பதற்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை கவனித்து உடனடியாக அவைக்கு நான் தகவல் தெரிவிக்கிறேன்.

பல்லகச்சேரி ஏரிப்பாசனப் பகுதி

***வினா எண் 870—திரு. செஞ்சி இராமச்சந்திரன் :** மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் கட்டப் பட்டுள்ள சூளாங்குறிச்சி அணையினால் பல்லகச்சேரி கிராமத்திலுள்ள ஏரிப் பாசனப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு மாற்றுத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகத்தின் விற்பனை நிலையங்கள்

*** வினா எண் 871—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகம் தனது சேல்ஸ் எம்போரியங்களை எந்தெந்த மாவட்டங்களில் நடத்திவருகிறது?

(ஆ) அதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்த உத்தேசம் உள்ளதா?

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) தமிழ்நாடு கைவினைப் பொருள் அபிவிருத்திக் கழகத்தின் (Tamil Nadu Handicrafts Development Corporation Limited) விற்பனை நிலையங்கள், கன்னியா குமரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தர்மபுரி மாவட்டங்கள் தவிர எல்லா மாவட்டங்களிலும் உள்ளன.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு புதிய விற்பனை நிலையம் ஆரம்பிக்க தகுந்த இடம் பார்க்கப்பட்டு வருகிறது. எஞ்சிய மாவட்டங்களில் புதிதாக விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்க தற்சமயம் உத்தேசமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கைவினைப் பொருட்கள் என்று சொல்லக்கூடியவை எந்தெந்தப் பொருட்களிலே இருந்து தயாரிக்கப் படுகின்றன? பனையிலே இருந்து கிடைக்கின்ற பொருட்களை வைத்து அதிகமான கைவினைப் பொருட்கள் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. அப்படி செய்கின்ற வாய்ப்பு இருக்கின்ற இடங்களில் எல்லாம் அதைச் செய் வதை ஊக்குவித்து அதனை விற்பனை செய்து, அதன் மூலமாக பல இடங் களில் உள்ள கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே அதைச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, கைவினைப் பொருட்கள், கலைப்பொருட்கள் என்று சொல்லக்கூடியவை பல மூலப்பொருள்களாலே செய்யப்படுகின்றன. சிற்பங்கள் செய்வது, சந்தன மரங்களிலிருந்து கலைப் பொருட்கள் தயாரிப்பது, களி மண்ணிலே இருந்து பல பொருட்கள் செய்வது இப்படிப் பல வகைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பனைப்பொருட்களைப் பயன்படுத்தி தயா ரிக்கக்கூடிய பொருட்களை விற்பனை செய்யக்கூடிய நிலையங்கள் காதி வாரி யத்தின் மூலமாக நடத்தப்படுகின்றன. சில உயர்ந்த பொருட்களை விற்பனை நிலையத்தின் மூலமாகவும் நாம் இன்றைக்கு விற்பனை செய்து கொண்டு வருகின்றோம். இருந்தாலும் பனையிலே இருந்து கிடைக்கின்ற மூலப் பொருட்களை வைத்துத் தயாரிக்கப்படுகின்ற பொருட்களை விற்பனை செய்வதை அரசு இப்போது சில பகுதிகளில் துவக்கி இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை செயல்படுத்தப்பட்டு வரு கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இந்தக் கைவினைப்பொருள் சேல்ஸ் மையங்கள் சில இடங்களிலே காட்சியாக இருப்பதைப் போலக் காண் கிறோம். ஆகவே இவைகளின் விற்பனை இன்றையதினம் இலாபகரமாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு இந்தக் கைவினைப்

பொருட்களை அன்னிய நாட்டிலும் நமது நாட்டிலும் விற்பதற்கு வேறு சில முறைகளை அரசு கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, கலைப் பொருட்களை விற்பனை செய்யக்கூடிய பூம்புகார் போன்ற விற்பனைக் கூடங்கள் கண்காட்சியைப் போல சிறப்பாக இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது விற்பனை நிலையங்கள் தானே தவிர வெறும் கண்காட்சிக் கூடம் அல்ல.

இந்த விற்பனையை அதிகரிப்பதற்கு அரசு என்னென்ன செய்திருக்கிறது என்று கேட்கிறார்கள். 1978-79-ம் ஆண்டு 181 இலட்ச ரூபாய் அளவிற்கு விற்பனை செய்திருக்கின்றார்கள். சராசரியாக 130 இலட்சம், 140 இலட்சம் என்ற அளவில் முன்பு விற்பனை நடந்ததை விட 40 இலட்ச ரூபாய் அளவிற்கு அதிகமாக இந்த விற்பனை நிலையங்கள் மூலமாக விற்றிருக்கிறோம். வெளி நாடுகளுக்கும் கலை நுட்பம் கொண்ட சிற்பப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப் பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, கைவினைப் பொருள் அபிவிருத் திக் கழகத்தின் விற்பனை நிலையங்கள் நான்கு மாவட்டங்களில் இல்லாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு புதிய விற்பனை நிலையம் ஆரம்பிக்க ஆவன செய்வதாகவும் சொன்னார் கள். தர்மபுரி மாவட்டத்திலும் இன்னும் இரண்டு மாவட்டங்களிலும் அப்படிப் பட்ட நிலையங்களை ஏற்படுத்துவதற்குரிய என்ன தகுதியை அவை இழந் திருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, 4 மாவட் டங்களில் இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்திருக்கிறோம். வெளி நாட்டுக்காரர்கள் வந்து செல்வது, அங்குள்ள மக்கள் தொகை, அது சுற்றுலா மையமாக இருக்கிறதா என்பதைப் பார்த்து இந்தக் கூடங்களை அமைத்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தர்மபுரி மாவட்டத்தையும் கவனித்து எடுத்துக் கொள்ளப்படும்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் நவீன சவ்வரிசி ஆலை

***வினா எண் 872—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கள்ளக்குறிச்சி வட்டத்தில் மிக அதிகமாக மரவள்ளிக் கிழங்குகளைப் பயன்படுத்தும் வகையில் நவீன சவ்வரிசி ஆலை (Modern Sago Factory) ஒன்றை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?